**செ. கு. எண்: 002** **நாள்: 06.01.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி** K. **பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 6.1.2018

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், பலக்கனூத்து கிராமம், திண்டுக்கல் – பழனி நெடுஞ்சாலையில் **31.12.2017** அன்று திண்டுக்கல்லில் இருந்து கோயம்புத்தூர் நோக்கி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும், ஒட்டன்சத்திரத்திலிருந்து திண்டுக்கல் நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தும் மோதி விபத்துக்குள்ளானது. அவ்விபத்தில் அரசுப் பேருந்தில் பயணம் செய்த திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. இங்களம் என்பவரின் மகன் திரு. விஸ்வநாதன், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பழனிச்சாமி என்பவரின் மகன் திரு. சத்தியமூர்த்தி, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரின் மனைவி திருமதி புவனேஸ்வரி, திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆனந்தன் என்பவரின் மனைவி திருமதி நாகஜோதி, திரு பாண்டியராஜன் என்பவரின் மகன் திரு. சபரி, திரு. மெர்ஸோன் என்பவரின் மகன் திரு. ஜோ டேனியல், திரு. ஆனந்தன் என்பவரின் மகன் திரு. வசீகரன், திரு. சோலையப்பன் என்பவரின் மனைவி திருமதி போதுமணி, திரு. அப்துல்காதர் என்பவரின் மகன் திரு. ஹைதர் அலி மற்றும் திரு. சக்திவேல் என்பவரின் மனைவி திருமதி. நாகலெட்சுமி ஆகிய **பத்து** நபர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த பத்து நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் 14 நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட

நிருவாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்து குறித்த செய்தியை அறிந்தவுடன், மீட்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும், அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் உடனடியாக செய்து கொடுக்கவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்திந்து அவர்களுக்கு ஆறுதல் கூறவும், காயமடைந்தவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்யவும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர் விஜயபாஸ்கர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோருக்கு நான் விபத்து நடந்த அன்றே உத்தரவிட்டிருந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த பத்து நபர்களின் குடும்பத்தினக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும்; சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**